இந்நிலையத்தில் கிடைக்கும் புஸ்தகங்கள்.

---

1. கிரியா புஸ்தகம் 2-ம் பாகம்
2. அருங்கலச்செப்பு
3. ஸ்வப்னஸ்தவம்
   ஸுப்ரபாதம்
4. விரதஸ்வரூபம்
5. ஜ்வாலாமாலினி சோபனமாலை
6. ஜைன ஸித்தாந்த முதற் புஸ்தகம்
   இரண்டாம் பதிப்பு
7. சின்ன புஷ்பாஞ்ஜலி, பெரிய புஷ்பாஞ்ஜலி, சாந்தியஷ்டகம்.

குறிப்பு:- நாகர புஸ்தகங்கள் தேவையானபோது வரவழைத்துக் கொடுக்கப்படும்.

ஆரணி ஸ்ரீ ஜைந ஸித்தாந்த நிலயத்தின் நோக்கம்.

சிறுவர்களுக்கு ஸம்ஸ்கிருதம், ஹிந்தி முதலான பாடங்களைப் போதிக்கவும், தமிழ் நாட்டுக்குத் தக்கவாறு வடமொழியில் இருக்கும் ஜைநமத தத்துவங்களை தமிழ்ப்படுத்தி எல்லோரும் சுலபமாய் அறியும்படியான புஸ்தகங்களை வெளிப்படுத்தி தத்துவங்களைப் போதிக்கவும், அவ்வப்போது ஏற்படும் தர்ம சம்பந்தமான கார்யங்களைச் செய்யவும் இந் நிலயமானது ஸ்தாபிக்கப்பட்டது.

முக்கிய அறிவிப்பு.

தத்வார்த்த ஸூத்ரம் தமிழ் உரையுடனும், ஜைந ஸித்தாந்த இரண்டாம் புஸ்தகமும் விரைவில் வெளியிடப்படும்.

இந் நிலயத்தின் வெளியீடுகள் லாபமின்றி அசல் விலைக்கே விற்கப்படும்.

ஜைந ஸித்தாந்த

முதற் புஸ்தகம்.

THE MADURA ... SANGAM

ஸ்ரீபாலவர்ணீ.

நன்றியறிவிப்பு.

தர்மாத்மர்களே !

அன்னம், ஔஷதம், அபயம், சாஸ்திரம் என்னும் நாவகைத் தானங்களில் "அன்னதானம் மஹாதானம்" என்படி அன்னதானமானது மிகவும் சிறந்தது. ஆயினும் "வித்யா தானந்து ததோதிகம்" என்னும் மொழியின்படி அன்னதானத்தைக்காட்டிலும் வித்யாதானம் மிக சிறந்ததாகும். ஏனெனில் "அன்னேனக்ஷண தஸ் திருப்தி: அன்ன தானத்தினால் சிறிதுகாலம் சுகமாகும் "யாவஜ்ஜீவந்து வித்யயா" வித்யா தானத்தினால் ஜீவன் இருக்கும் வரையில் (எக்காலமும்) சுகம் உண்டாகும். ஆதலால் கல்வி தானம் செய்தல் இம்மைக்கும் மறுமைக்கும் சுகத்தின் காரணமாகும். அந்தசுகத்தை யடைய மேல் சித்தாமூர் ஸ்ரீமான் வே. பார்ஸ்வநாத் நைனர் குமார்த்தியும், ஸ்ரீமான் வே. ஜீ. சம்பத்து நைனர் தமக்கையுமான ஸ்ரீமதி தனமதி அம்மாள் செய்த தானம் என்றும் மறக்கற்பாலதன்று. ஸ்ரீபரமாத்மன் இவருக்கு எவ்வேளையும் இன்னருள் புரிக.

இவரைப்போல் ஒவ்வொருவரும் இந்நிலையத்தின் வாயிலாக தானம் செய்து மஹத்புண்ய ஸஞ்சயம் பெறுவீர்களெனக் கோருகிறோம்.

இங்ஙனம்,

ஸ்ரீ ஜைந ஸித்தாந்த நிலையத்தார்,

ஆரணி.

THE MADURA

ஓம்
ஸித்தந்நம:

ஜைந ஸித்தாந்த
முதற் புஸ்தகம்

ஸ்ரீமான் ஸ்ரீபாலவர்ணீயவர்களால்

எழுதப்பட்டு

ஸ்ரீ ஜைந ஸித்தாந்த நிலையத்தின் வெளியீடுகளுக்காக

மேல்சித்தாமூர் ஸ்ரீமதி தனமதியம்மாள்

தானமாக அளித்த முதல் பதிப்பின்

மூலதனத்தைக்கொண்டு

ஆரணி ஸ்ரீ ஜைந ஸித்தாந்த நிலையத்தாரால்

ஆரணி கிருஷ்ண அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

பதிப்புரிமை] 1942 [விலை அணா 3-

முகவுரை.

மானிடப் பிறவியின் பிரயோஜனம் ஹிதாஹிதஞானம் பெறுவதாகும். அதைப்பெறக் காரணம் வித்தையாகும். (இளமையிற்கல்) என்றபடி, வித்தையை கற்க இளமையே தக்க பருவமாகும். எவ்வாறு புதிய மட்பாண்டத்தில் வைக்கப்பட்ட வாஸனை அப்பாண்டம் உடையும்வரைக்கும் அப்பாண்டத்தைவிட்டு நீங்காமலிருக்குமோ அவ்வாறு இளமையிற் கற்ற வித்தையானது கற்றவருடைய வாழ்நாட்கள் பரியந்தம் நீங்காமலிருக்கும். ஆதலால் இளமைக்குத் தக்கவாறு போதிக்க நலமாகுமென்று ஸ்ரீ ஜைன ஸித்தாந்த நிலைய ஸ்தாபகராகிய **ஸ்ரீமான் ஸ்ரீபாலவர்ணீ யவர்களால்** எழுதப்பட்ட முதற் புஸ்தகத்தை முழுதும் பார்த்தேன். இது ஜைந மதத் தத்துவங்களையறிய மிக சுலபமாகும். இது சிறுவர்களுக்கு மட்டுமின்றி, ஜைநப் பெரியோர்களுக்கும் ஜைந மதத் தத்துவங்களையறிய விருப்பமுள்ள ஆஸ்திக மதாவலம்பிகளான ஜைநேதர பெரியோர்களுக்கும் உபயோகமாகும்.

ஸ்ரீமான் வர்ணீயவர்கள் இதைப்போல் இரண்டாம் புஸ்தகம் முதலியவைகளை வெளியிடுவதின் மூலம் மானிட வர்க்கத்திற்கு பேருபகாரம் செய்யத்தக்க ஸர்வ சக்திகளும் நீண்ட ஆயுளும் உண்டாகவேண்டுமென்று ஸர்வ சக்தனுகிய பரமாத்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

C. வசுபால நைனர், ஆரணி.

பொருளடக்கம்

		பக்கம்.
1.	பஞ்சநமஸ்காரம்	1
2.	ஜைனர்	2
3.	ஜபம்	2
4.	தியானம்	3
5.	நவதேவதைகள்	4
6.	கடவுள்	6
7.	ஜிநனின் பெயர்கள்	7
8.	நூல்	9
9.	முனி	9
10.	ஸம்யக்தரிசனம்	11
11.	ஸம்யக்ஞானம்	12
12.	ஸம்யக் சாரித்திரம்	14
13.	இல்லறத்தார்களின் பதினோரு நிலைகள் ...	17
14.	இல்லறத்தார்களின் காலைக்கடமை ...	19
15.	இல்லறத்தார்களின் நித்தியக்கடமை ...	20
16.	ஸப்த தத்வம்	21
17.	நவபதார்த்தம், ஷட் திரவ்யம்	24
	பஞ்சாஸ்திகாயம்	25
18.	கதிகள்	26
19.	நிகழ்கால திரிசஷ்டி சலாகா புருஷர்கள் ...	26
20.	நிகழ்கால காமதேவர்கள், மனுக்கள் நாரதர்கள் ருத்ரர்கள்	30
21.	இறந்தகால தீர்த்தங்கரர்கள் / எதிர்கால தீர்த்தங்கரர்கள் / விதேஹ க்ஷேத்ர தீர்த்தங்கரர்கள் ...	31
22.	மூவுலகம்	31
23.	கேள்விகள்	34

தரிசன ஸ்துதி.

யாவந்தி ஜினசைத்யானி வித்யந்தே புவனத்திரயே
தாவந்தி ஸததம் பக்த்யா த்ரிப்பரீத்ய நமாம்யஹம் 1

தர்சனம் தேவதேவஸ்ய தர்சனம் பாபநாசனம்
தர்சனம் ஸ்வர்க்க ஸோபானம் தர்சனம் மோக்ஷஸாதனம் 2

தர்சனேன ஜிநேந்த்ராணாம் ஸாதூநாம் வந்தநேனச
நசிரம் திஷ்டதேபாபம் சித்ரஹஸ்தே யதோதகம் 3

வீதராககமுகம் திருஷ்ட்வா பத்மராக ஸமப்பிரபம்
நைகஜன்ம கிருதம் பாபம் தர்சனேன விநச்யதி 4

தர்சனம் ஜிநஸூர்யஸ்ய ஸம்ஸார த்வாந்தநாசனம்
போதனம் சித்தபத்மஸ்ய ஸமஸ்தார்த்த பிரகாசனம் 5

தர்சனம் ஜிநசந்த்ரஸ்ய ஸத்தர்மாம்ருத வர்ஷணம்
ஜன்மதாஹ விநாசாய வர்த்தனம் ஸுகவாரிதே : 6

ஜீவாதிதத்வப் பிரதிதர்சகாய ஸம்யக்த்வமுக்யாஷ்ட குணச்ரயாய
பிரசாந்தரூபாய திகம்பராய தேவாதிதேவாய நமோஜிநாய 7

சிதாநந்தைக ரூபாய ஜிநாய பரமாத்மனே
பரமாத்மப் பிரகாசாய நித்யம் ஸித்தாத்மனேநம : 8

அனந்தானந்த ஸம்ஸார ஸந்ததிச்சேத காரணம்
ஜிநராஜ பதாம்போஜ ஸ்மரணம் சரணம் மம 9

அன்யதா சரணம்நாஸ்தி த்வமேவ சரணம் மம
தஸ்மாத் காருண்யபாவேன ரக்ஷரக்ஷ ஜிநேச்வர 10

ஜிநதர்ம விநிர்முக்தம் மாபவம் சக்ரவர்த்யபி
ஸசந்த்தோபி தரித்ரோ'பி ஜிநதர்மே நிவாஸநம் 11

ஜன்ம ஜன்ம க்ருதம்பாபம் ஜன்மகோடி ஸமார்ஜிதம்
ஜன்ம மிருத்யு ஜரா மூலம் ஹந்யதே ஜினதர்சனாத் 12

நஹித்ராதா நஹித்ராதா நஹித்ராதா ஜகத்திரயே
வீதராகாத் பரோ தேவோ நபூதோ ந பவிஷ்யதி 13

ஜிநேபக்திர் ஜிநேபக்திர் ஜிநேபக்திர் தினே தினே
ஸதாமேஸ்து ஸதாமேஸ்து ஸதாமேஸ்து பவே பவே 14

விக்னௌகா : பிரளயம் யாந்தி சாகினீ பூதபன்னகா.
விஷம் நிர்விஷதாம் யாதி ஸ்தூயமானே ஜிநேஸ்வரே. 15

---

1. பஞ்ச நமஸ்காரம்.

முப்பத்தைந்து எழுத்துக்களுள்ள மந்த்ரம்.

ணமோ அரஹந்தாணம்
ணமோ ஸித்தாணம்
ணமோ ஆயிரியாணம்
ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ ளோயே ஸவ்வஸாஹூணம்

பதினாறு எழுத்துக்களுள்ள மந்த்ரம்.

அரஹந்த ஸித்த ஆயிரியா உவஜ்ஜாயா ஸாஹூ.

ஆறு எழுத்துக்களுள்ள மந்த்ரம்.

அரஹந்தஸிஸா அல்லது ஓம் நமஸ்ஸித்தேப்ய:

ஐந்தெழுத்துக்களுள்ள மந்த்ரம்.

அ ஸி ஆ உ ஸா

நான்கெழுத்துக்களுள்ள மந்த்ரம்.

அரஹந்த அல்லது அ ஸி ஸா ஹூ

இரண்டெழுத்துக்களுள்ள மந்த்ரம்.

ஸித்த, அ ஆ அல்லது ஓம் ஹ்ரீம்

ஓரெழுத்து மந்த்ரம்.

ஓம்

2. ஜைநர்.

வினையின் நீங்கி விளங்கிய வறிவனாகிய
ஜிநனை வழிபடுவோர் ஜைநர்.

பசி, பிணி முதலான தோஷங்களினின்றும்நீங்கி முற்று முணரும் ஞானமுள்ள ஜிநன் உபதேசித்தவழியில் (தருமத்தில்) நடப்பவர் (இருப்பவர் அல்லது பிரீதியுள்ளவர்) ஜைநர்.

ஜைநரின் முக்கிய கொள்கை.

கோல்லா விரதம் (அஹிம்ஸா விரதம்)

ஜைநரின் முதல் ஆசாரம்.

மத்யம் (கள்) மாம்ஸம் (புலால்) மது (தேன்) பஞ்சோதும்பரம் (அத்தி, ஆல், அரசு, இரளி, கல்லத்தி அல்லது பேயத்திக்காய்கள்) இவைகளைப் புசியாது பிரதிதினம் பஞ்ச நமஸ்கார மந்த்ரம் ஜபித்தல், வடித்தநீர் உபயோகித்தல், இரவில் உண்ணாமை ஜீவகாருண்யம் முதலியவைகளாகும்.

3. ஜபம்.

பஞ்ச நமஸ்கார மந்த்ரங்களையும், ஸித்த சக்ரமந்த்ர முதலியவைகளையும், உச்சரித்தல் ஜபமாகும்.

இந்த ஜபமானது வாசனிகம், உபாம்சுகம், மானஸிகம் என மூன்று விதமாகும்.

வாசனிகம்—தப்பின்றிச் சுத்தமாக உச்சரித்தல்.

உபாம்சுகம்—உதடசையும்படி மெதுவாகஉச்சரித்தல்

மானஸிகம்—மனத்தில் உச்சரித்தல்.

இல்லறத்தார்களுக்குத் தாம் செய்யும் தொழில்களினாலும் குற்றல், அரைத்தல், அடுப்பெரித்தல், நீர் நிரப்புதல், விளக்குதல் என்னும் ஐந்து ஸூனைகளினாலும், ஸம்ரம்பம்

(கார்யத்தைச்செய்யவேண்டுமென்று நினைத்தல்)ஸமாரம்பம் (கார்யத்தைச் செய்யச் சாமான்களை சேகரித்தல்) ஆரம்பம் (கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தல்) கிருதம் (தான்செய்தல்) காரிதம் (அயலாரால்செய்வித்தல்) அனுமோதம் (பிறர்செய்ததற்கு ஆமோதித்தல்) மனோயோகம் (கெட்ட கார்யத்தில் மனம் செலுத்துதல்) வசனயோகம் (கெட்ட வார்த்தைப் பேசுதல்) காயயோகம் (கெட்டகார்யம் செய்தல்) குரோதம் (கோபித்தல்) மானம் (கர்வித்தல், அஹங்காரம் கொள்ளுதல்) மாயை (கபடம் செய்தல்) லோபம் (அத்யாசைபடுதல்) முதலானவைகளினாலும் வரும் பாபங்களைத் தடுக்க ஜபம் செய்ய வேண்டும்.

பொன், வெள்ளி, முத்து, பவழம், ஸ்படிகம் இம்மணிகளினால் ஜபம் செய்தால் உபவாஸத்தைக் காட்டிலும் அதிக பலனுண்டாகும். நூல் ஜபமாலையானது எப்பொழுதும் சுகத்தைத்தரும். மண், மரம், கண்ணாடி, எலும்பு, ருத்திராக்ஷம் முதலிய மணிகள் பலனைத்தாரா.

4. தியானம்

எல்லாச் சிந்தனைகளையும் விட்டு ஒருபொருளைச் சிந்தித்தல் (நினைத்தல்) தியானமாகும்.

இத்தியானமானது ஆர்த்தம், ரௌத்திரம், தர்ம்யம், சுக்லம் என நான்கு விதமாகும்.

ஆர்த்தத் தியானம்—தனக்கிஷ்டமான பெண் ஜாதி, பிள்ளை, நிலம், வீடு முதலிய பொருள்கள் நாசமாகில் அவைகள் மறுபடியும்எப்படிஎப்பொழுதுவரும் என்று சிந்தித்தல், தனக்கிஷ்டமில்லாத முள், கல், கெட்டமனைவி, துஷ்டபுத்திரன், பகையாளி முதலானவர்கள் பிராப்தமாகில் அவர்கள் எப்பொழுது நாசமடைவார்கள் என சிந்தித்தல்,வியாதியின் பீடையை நினைத்துச்சிந்தித்தல்,மறுபவத்தில் நல்லஸம்ஸார வாழ்க்கையை அடையவேண்டுமென்று நினைத்தல் முதலியன ஆர்த்தத் தியானமாகும்.

ரௌத்ரத்தியானம்:—கொலைசெய்ய விரும்புதல், கொலையின் விஷயத்தைப்பேசுதல், கொலையின் விஷயத்தைக் கேட்டுச் சந்தோஷித்தல், பொய் பேசவேண்டுமென்று நினைத்தல், பொய்ப் பேச்சைக்கேட்டுச் சந்தோஷித்தல், திருடவேண்டுமென நினைத்தல், திருடிவந்த பொருளைக்கண்டு சந்தோஷித்தல், திருட்டு வார்த்தை பேசுதல், பொருட் பற்றுக்களில் மனத்தைச் செலுத்துதல், பொருட்பற்றுக்களைக் குறித்துச் சந்தோஷித்தல் முதலியன ரௌத்திரத் தியானமாகும்.

தர்ம்யத்தியானம்:—ஸ்ரீ ஜிநபகவான் உரைத்த வாக்கை (ஆகமத்தை)ச் சிந்தித்தல், ஸம்ஸார ஜீவன்களுக்குண்டாகும் அபாயத்தைக் குறித்துச் சிந்தித்தல், சுக துக்க ரூபமான கருமோதயத்தைச் சிந்தித்தல், உலக ஸ்வரூபத்தைச் சிந்தித்தல்,

மந்த்ர வாக்யங்களிலிருக்கும் பதங்களைச் சிந்தித்தல், தன்னாத்மனைச் சிந்தித்தல், ஞானமுதலான சைதன்ய ரூபத்தைச் சிந்தித்தல், சமஸ்த கர்ம களங்கமற்ற பரிசுத்தபரமாத்மனைச் சிந்தித்தல் முதலியன தர்ம்யத்தியானமாகும்.

சுக்லத்தியானம்—நிர்மலத்தியானம் (அ) ஆத்மத் தியானம்.

5. நவதேவதைகள்.

தேவ (கடவுள்) தன்மையை யடைந்த அருகரும், சித்தரும், தேவ தன்மையை அடையும் வழியில் இருப்பவரான ஆசாரியரும், உபாத்தியாயரும், ஸர்வ ஸாதுக்களும், தேவ தன்மையையடைய ஸாதகமான ஜிந தர்மம், ஜிநஸ்ருதம், ஜிந சைத்யம், ஜிந சைத்யாலயம் ஆகிய இவைகள் ஒன்பதும் தேவ தன்மையுள்ளதால் நவதேவதைகள் என்று கூறப்பட்டது.

குறிப்பு:— ஆர்த்தம் துக்கத்தினால் உண்டாதல், ரௌத்ரம் கெட்ட ஆசையினால் உண்டாதல், தரும்யம்—தருமத்துடனிருத்தல், சுக்லம்—சுத்தாத்மபரிணாமஸ்வரூபம்.

1. அருகர் (அரிஹர்)—ஞானவரணீயம், தரிசனவரணீயம், மோஹநீயம் அந்தராயம், என்னும் நான்கு காதி கருமங்களைக்கெடுத்து உலகிலுள்ள வஸ்துக்களைப் பிரத்யக்ஷமாகப் பார்த்து (அறிந்து) உபதேசிப்பவர்.

குறிப்பு :—காதிகருமம்—ஆத்மகுணங்களைக் கெடுப்பது.

ஞானவரணீயம்—ஞானத்தை மறைக்கும் கருமம்.

தரிசனவரணீயம்—தரிசனத்தை மறைக்கும் கருமம்.

மோஹநீயம்—மயக்கத்தை (மோஹத்தை)ச் செய்யும் கருமம், நற்காட்சியையும், நல்லொழுக்கத்தையும் கெடுக்கும் கருமம்.

அந்தராயம்—விக்நம் செய்யும் கருமம்.

2. ஸித்தர்—மேற்கூறிய நான்குகாதி கருமங்களையும் ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், வேதநீயம் என்னும் நான்கு அகாதி கருமங்களையும் கெடுத்து உலகத்தின் மேல்பாகத்தில் என்றுமழிவில்லாமலிருப்பவர்

குறிப்பு :—

அகாதி கருமம்—ஆத்ம குணங்களைக் கெடுக்காதது. ஆயுஷ்யம்—ஒவ்வொரு பிறப்பிலும் வாழ்நாளுக்குக் காரணமான கருமம். நாமம்—உருவம், குரல் ஆதரவு கீர்த்தி முதலியனவைக்குக் காரணமான கருமம். கோத்திரம்—உயர்வு, தாழ்வு முதலான குலங்களுக்குக் காரணமான கருமம். வேதநீயம்—ஸம்ஸார சுக துக்கங்களுக்குக் காரணமான கருமம்.

3. ஆசாரியர்—பிரம்மசாரி, கிருஹீ, வானப்பிரஸ்த, பிக்ஷு அல்லது ருஷி, ஆர்யிகா, (ஆர்யாங்கனை) ஸ்ராவக, ஸ்ராவகீ என்னும் நால்வகைக் கூட்டங்களுக்குத் தலைவராகி ஒழுக்க முதலானவைகளை ஆசரிப்பவரும், ஆசரிக்கவைப்பவரும் ஆவர்.

4. உபாத்தியாயர்—படிப்பதிலும் படிக்க வைப்பதிலும் ஊக்கமுள்ளவராகி தருமோபதேசம் செய்பவர்.

5. ஸர்வ சாதுக்கள்—தன்னுத்ம (ஹிதத்தை) சுத்த ஸ்வரூபத்தை ஸாதிப்பவர்கள்.

6. ஜிநதருமம்—ஸம்ஸாரத்திலுண்டாகும் துக்கங் களை நீக்கி என்றும் அழிவில்லாமலிருக்கிற மோக்ஷ சுகத் தைத் தரக்கூடியது.

7. ஜிநஸ்ருதம்—ஜிநனுரைத்த வாக்கு (நூல்)

8. ஜிநசைத்யம்—ஜிநபிம்பம் (ஜிநனுருவு)

9. ஜிநசைத்யாலயம்—ஜிநாலயம் (ஜிநன்கோவில்)

குறிப்பு:—

1. ஸம்யக்தரிசனம் (நற்காட்சி) 2 ஸம்யக்ஞானம் (நல்லறிவு) 3 ஸம்யக்சாரித்ரம் (நல்லொழுக்கம்) ஆகிய இம் மூன்றும் சேர்ந்து ஜிந தர்மமாகும். இம்மூன்றையும் ரத்னத் திரயம் (மும்மணி) என்றும் கூறுவர். பிறசமயத்தார் இம் மூன்றையும் பக்தி, ஞான, வைராக்கியம் எனக்கூறுவர்.

6. கடவுள் (ஆப்தன் அல்லது ஜிநன்)

குற்றமொன்றின்றிக் குறையின் றுணர்ந்தறம்
பற்றவுரைத்தானிறை. —(அருங்கலச்செப்பு)

பசி முதலான பதினெண் குற்றங்களையும் நீக்கி எல்லா வற்றையும் அறிந்து தருமத்தை யறிவித்தவன் ஆப்தன் (கடவுள்)

பதினெண்குற்றங்களாவன:—1. க்ஷுத் (பசி) 2. திருஷா (நீர்வேட்கை அல்லது தண்ணீர் தாஹம்) 3. பயம் (அச்சம்) 4. ராகம் (ஆசை) 5. துவேஷம் (கோபம்) 6. மோஹம் (மயக் கம்) 7. சிந்தனம் (சிந்தனை) 8. ஜரா (மூப்பு, கிழத்தனம்) 9. ரோகம் (வியாதி, நோய்) 10 மரணம் (இறப்பு) 11. ஸ்வேத (வியர்வை) 12. கேதம் (இளைப்பு) 13. மதம் (கர்வம்) 14. ரதி (பிரீதி, விருப்பம்) 15 விஸ்மயம் (ஆச்சரியம் வியப்பு) 16. ஜனனம் (பிறப்பு) 17. நித்ரை (தூக்கம்) 18. விஷாதம் (வருத்தம்)

7 ஜிநனின் பெயர்கள்.

ஜிநன்—கருமத்தை ஜயித்தவன்.

கேவலீ—கேவலக்ஞானமுள்ளவன்.

ஸர்வக்ஞன்—முற்றுமுணர்ந்தவன்.

அருகன்—(அரிஹன்) கருமச் சத்ருவை வென்றவன்.

வீதராகன்—ஆசையற்றவன்.

பகவான்—ஞானமுள்ளவன்.

பரமாத்மன்—உத்கிருஷ்டாத்மன்.

பரமேஷ்டி—உயர்ந்த பதவியிலிருப்பவன்.

சாஸ்தா—(தருமத்தை) உபதேசிப்பவன்.

தீர்த்தங்கரன்
தீர்த்தகரன்
தீர்த்தக்ருத் } தருமோபதேசம் செய்பவன்.

பரஞ்ஜ்யோதி :—கேவலக்ஞானமாகிற பிரகாசமுள்ளவன், மெய்புணர்வுடையோன்.

விமலன்—கரும களங்கம (அழுக்க) ற்றவன்.

ஆப்தன்—உண்மையை யுரைப்பவன்.

ஸார்வ:—எல்லோருக்கும் ஹிதத்தைக்காண்பிப்பவன்.

புத்தன்—எல்லாவற்றையும் அறிந்தவன்.

சிவன்—முக்தியடைந்தவன்.

விஷ்ணு:—கேவலக்ஞானத்தினால் உலகமுழுதும் பாவியிருப்பவன்.

காமதேனு:—இச்சித்த பொருள்களைக் கொடுப்பவன்.

சிந்தாமணி:—சிந்தாமணியைப்போல்சிந்தித்தபொருள்களைக் கொடுப்பவன்.

ஸ்ரீநிவாஸன்—லக்ஷ்மிக்கு இருப்பிடமானவன்.

ஸதாசிவன்—எப்பொழுதும் மோக்ஷ ஸ்வரூபத்திலிருப்பவன்.

தேவன்—பரமானந்தத்தில் கிரீடிப்பவன்.

ஜகந்நாதன்—மூவுலகத்திற்கும் ஸ்வாமி.

விக்நவிநாயகன்—அந்தராய கர்மங்களை வென்றவன்.

லக்ஷ்மீபதி:—மோக்ஷ லக்ஷ்மிக்குடையவன்.

தர்மராஜன்—தருமத்திற்கு எஜமானன்.

த்ரயம்பகன் } இறப்பு, நிகழ்வு, எதிர்வு, என்னும்
முக்கண்ணன் } மூன்று காலங்களிலுமுள்ள பொருள்களைப் பார்ப்பவன் அல்லது பிறந்த காலத்திலேயே மதி, ஸ்ருத, அவதி என்னும் மூன்று ஞானக்கண்ணுள்ளவன்.

தர்மபாலன்—தருமத்தைக் காப்பாற்றுகிறவன்.

ஜகத்பாலன்—உலகத்தைக் காப்பாற்றுகிறவன்.

கிருபாலு:—தயையுள்ளவன்.

கல்பவிருக்ஷ:—இஷ்டார்த்தத்தைப் பூர்த்தி செய்கிறவன்.

பிருதிவீமூர்த்தி:—பூமியைப்போல் பொருமையுள்ளவன்.

வாயுமூர்த்தி:—காற்றைப்போல் யாதொரு பற்றுதலும் இல்லாதவன்.

அக்நிமூர்த்தி:—நெருப்பைப்போல் கர்மத்தைத் தஹிப்பவன்.

சங்கரன்:—சுகத்தைக் கொடுப்பவன்.

பிரம்மா:-கேவலக்ஞானத்தினல் விருத்தியடைந்தவன்.

அச்யுதன்—அழிவில்லாதவன் (தோன்றுதலும் அழிதலும் இல்லாதவன்.)

அஜ:—பிறப்பில்லாதவன்.

சம்பு:—சுகத்தைக் கொடுப்பவன்.

ஹர:—கருமத்தைக் கெடுத்தவன்.

வாசஸ்பதி:—வசனங்களுக்கு எஜமானன்.

ஸஹஸ்ராக்ஷ:—அனந்த தர்சனமுள்ளவன்.

ஸ்தாணு:—எக்காலத்திலும் (பிரளயகாலத்திலும்) சஞ்சலமில்லாமல் ஸ்திரமாயிருப்பவன்.

ஈஸாந:—எல்லோருக்கும் ஸ்வாமி.

பிரம்மவித்—ஆத்ம ஸ்வரூபத்தை யறிந்தவன்.
கணேச:—முனி முதலான பன்னிரண்டு கணங் (கூட்டங்)களுக்கும் ஸ்வாமி.

பன்னிரன்டு கணங்களாவன :—முனி, கல்பவாசி தேவியர், ஆர்யாங்கனைகள், ஜோதிஷ்க தேவியர், வியந்தர தேவியர், பவண தேவியர், பவண தேவர், வியந்தர தேவர், ஜோதிஷ்க தேவர், கல்பவாஸி தேவர், மனிதர், பசு பக்ஷிகள்.

மஹாபலன்—அதிசயமான (அளவற்ற) பலமுள்ளவன்.

மஹேச்வரன்—இந்திரன் முதலான எல்லா தேவர்களுக்கும் எஜமானன்.

சதுர்முகன்—கேவலக் ஞானேத்பத்தியினல் நான்கு முகமுள்ளவனுகத் தோன்றினவன்.

ஹிரண்யகர்ப்பன்—கர்ப்பத்திலிருக்கும் பொழுதே பொன்மாரியை அடைந்தவன்.

குறிப்பு :— ஜிநனுக்கு 1008 பெயர்கள் உள்ளன. அவற்றுள் சிலவே இங்கு குறிக்கப்பட்டன.

8. நூல் (ஆகமம்)

வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும். (நன்னூல்)

என்று முண்டாகி யிறையால் வெளிப்பட்டு
நின்றது நூலென்றுணர். (அருங்கலச்செப்பு)

கருமத்தை வென்று எல்லா முணர்ந்த ஜிநனுடைய திவ்யத்வனி (திருவாய்மொழி)யிலிருந்து வெளியானது நூலாகும்.

9. முனி (துறவி அல்லது குரு)

இந்தியத்தை வென்றுன் றுடர்ப்பாட்டோடாரம்ப
முந்து துறந்தான் முனி. (அருங்கலச்செப்பு)

ஐம்புலன்களையும் அடக்கி (தன் வசமாக்கி) நிலம், வீடு, முதலான புறப்பற்றுக்களையும், உண்மையறியாமை (மித்யாத்வம்) பெண்ணாசை முதலான அறப்பற்றுக்களையும், உழவு முதலான தொழில்களையும் பற்றற துறந்தவன் துறவியாகும்.

புறப் பற்றுக்கள் பத்து அவையாவன :—

1. க்ஷேத்ரம் (நிலம்) 2. வாஸ்து (வீடு) 3. ஹிரண்யம் (நாணயம்) 4. ஸ்வர்ணம் (பொன்) 5. தனம் (ஐஸ்வரியம் மாடு முதலானவைகள்) 6. தான்யம் 7. தாஸி (வேலைக்காரி) 8. தாஸன் (வேலைக்காரன்) 9. குப்யம் (வஸ்திரம்) 10. பாண்டம் (பாத்திரம்)

அகப் பற்றுக்கள் பதினான்கு அவையாவன :—

1. மித்யாத்வம் (கள்குடியன் அல்லது பைத்தியக்காரன், இல்லாத பொருளை இருக்கிறதென்றும், இருப்பதை இல்லையென்றும், மனைவியை தாயென்றும், தாயை மனைவியென்றும், கெட்டதை நல்லதென்றும், நல்லதை கெட்டதென்றும் அறிவது போல்) உண்மையறியாமை. 2. ஸ்திரீவேதம் (ஆண்களிடம் ரமிக்கும் ஆசை) 3. பும்வேதம் (பெண்களிடம் ரமிக்கும் ஆசை) 4 நபும்ஸகவேதம் பெண்களிடமும் ஆடவர்களிடமும் ரமிக்கும் ஆசை (நபும்ஸகவேதம் என்பது அலிகளின் ஸ்வபாவத்தைக்கூறுதல் அலியானவர் பெண்களிடம் ஆணைப்போலவும், ஆண்களிடம் பெண்களைப்போலவும் ரமிக்கும் ஸ்வபாவமுள்ளவர் ஆதலால் இருவரிடமும் ரமிக்கும் ஆசைஅலிக்குண்டாகும். 5. ஹாஸ்யை (சிறிப்பு) 6. ரதி (விருப்பம்) 7. அரதி (விருப்பமின்மை) 8. சோகம் (இஷ்ட வியோகத்தால்நேரும் தன்மை) 9. பயம் (அச்சம்) 10 ஜுகுப்ஸை (அருவருப்பு) 11. குரோதம் (கோபம்) 12. மானம் (அஹங்காரம், கர்வம்) 13. மாயை (கபடம்) 14. லோபம் (அத்யாசை.)

தொழில்கள் ஆறு அவையாவன :—

1. அஸி (வாள்) 2. மஸி (வரைவு) 3 கிருஷி (உழவு) 4 வாணிஜ்யம் (வாணிபம்) 5. வித்யா (ஆயுதப்பயிற்சி, வித்தை) 6. சில்பம் (சித்ரவேலை.)

10. ஸம்யக் தரிசனம் (நற்காட்சி)

மூன்றுவித மூடங்களினும் எட்டு வித மதங்களினும் நீங்கி எட்டங்கங்களுடன் கூடிக் கடவுள், நூல், முனிகளை நம்புதலும் ஜீவன் (உயிருள்ளது) முதலான ஏழுதத்துவங்களை நம்புதலும் நற்காட்சியாகும்.

இது நிஸர்க்கஜம், அதிகமஜம், என இருவிதமாகும். நிஸர்க்கஜம்—பிறருபதேசமின்றித் தானாக உண்டாதல். அதிகமஜம்—பிறருபதேசத்தால் உண்டாதல்.

மும்மூடம்.

1. உலகமூடம்—புண்ணிய முண்டாகு மென்றும் மோக்ஷ மடையலா மென்றும் கருதி மலையின் மேலேறி வீழ்தல், நெருப்பில் பாய்தல், நதி, ஸமுத்திரங்களில் மூழ்குதல், தீர்த்த ஸ்நானம் செய்தல் முதலியவை உலக மூடமாகும்.

2. தேவமூடம்—ஆசை, கோபம் முதலியவைகளுள்ள தேவதைகளை வரம் தரவேண்டுமென்று வணங்குதல் அல்லது ஆசை, கோபம் முதலானவைகளுள்ள உண்மையற்ற (மித்யா) தேவர்களை வணங்குதல்

3. பாஷண்டிமூடம்—நன் மார்க்கத்தை யறியாத மாயாசாரியான தபஸ்விகளை வணங்குதல்.

எண்மதங்கள்.

1. ஞானம் [அறிவு] 2. பூஜா [சிறப்பு, பெருமை] 3. குலம் [தகப்பன், வழி] 4. ஜாதி [தாய்வழி] 5. பலம் [வல்லமை] 6. ருத்தி [செல்வம்] 7. தவம் [தபம்] 8 வபு: [சரீரம், உடல்] இவ்வெட்டையும் அடைந்து நானே பெரியோன் என்று கர்வித்தல் எட்டுவித மதமாகும்.

எட்டங்கங்கள்.

1. நிச்சங்கை [ஐயமின்மை]—சந்தேஹம் அல்லது பயம் அறல்.

2. நிஷ்காங்க்ஷை (அவாவின்மை)—ஆசையறல்.

3. நிர்விசிகித்ஸை (இழிப்பின்மை)—அருவருப்பறல்.

4 அமூடதிருஷ்டித்வம் (மயக்கின்மை)—மூடமின்றித் தெளிதல்.

5. உபகூஹநம் (அறப்பழி நீக்கல்)—தோஷங் கூறுமை விருத்தல்.

6. ஸ்திதிகரணம் (அழிந்தாரைத்தாங்குதல்)—தருமத்தினின்றும் நழுவினவரைப்பழையபடி தருமத்தில்நிறுத்தல்.

7. வாத்ஸல்யம் (அறத்துக்களவளாவல்)— கன்று கண்ட கறவைப்போல் தன்னினத்தாருடன் (தான்கொண்டு நிகழும் தர்மத்தில் வர்த்திப்பவருடன்)அன்புடன் இருத்தல்.

8. மார்க்கப்பிரபாவனை (அறத்தை விளக்குதல்)— தானம், தபம், ஜிநபூஜை, வித்தை முதலானவைகளினுல் தருமப்பிரசாரம் செய்தல்.

இப்பெற்றியதான நற்காட்சியுள்ளவர் மறு பிறப்பில் நாரகராகவும், விலங்குகளாகவும், பெண்களாகவும், அலிகளாகவும், ஏழைகளாகவும், கூன், குருடு, செவிடு, ஊமை, நொண்டி, முடவர்களாகவும் பவண, வியந்திர, ஜோதிஷ்கர் என்னும் மூவகை தேவர்களாகவும் ஜனிக்கமாட்டார்கள்.

நற்காட்சியுடையார் வைமாநிக தேவர்களாயும், தேவேந்திரர்களாயும், சக்ரவர்த்திகளாயும், வித்யாதரர்களாயும், பல தேவர்களாயும் தீர்த்தங்கரர்களாயும், ஜனித்துக் கடைசியாக மோக்ஷமடைவார்கள்.

11. ஸம்யக்ஞானம் (நன்ஞானம்)

பொருணின்ற பெற்றியைப் பொய்யின்றுணர்தல்
மருளறு நன்ஞானமாண்பு, [அருங்கலச்செப்பு]

உயிரும், உயிரில்லதும் முதலிய பொருள்களின் உண்மையை உள்ளபடி உணர்தல் நன்ஞானமாகும்.

1. பிரதமானுயோகம்—அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களையுடைய சரித்திரத்தையும் (ஒருவர் கதையும்) புராணத்தையும் (அறுபத்துமூவர் கதையும்) ஸம்யக்தரிசன முதலானவைகளின் பிராப்தியையும் கூறும் நூல்கள்.

2. கரணுனுயோகம்—உலகஸ்வரூபத்தையும், உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி என்னும் காலப் பிரிவுகளையும், நான்கு கதிகளையும் கூறும் நூல்கள்.

3. சரணுனுயோகம்—இல்லறத்தார், துறவறத்தார்களின் ஒழுக்கத்தைக் கூறும் நூல்கள்.

4. திரவ்யானுயோகம்—உயிரும், உயிரில்லதும் முதலிய பொருள்களையும், புண்ணிய பாபங்களையும், பந்தமோக்ஷங்களையும் கூறும் நூல்கள்

குறிப்பு:—பிரதமானுயோக முதலான நான்கு அனுயோகங்களையும், ஸம்யக்ஞானமாகிற ஸ்ருதக்ஞானமானது அறிகிறது.

ஐவகை நன்ஞானம்.

1. மதிக்ஞானம்—மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் இவைகளின் உதவியினுல் அறிதல் (கண்களால் பார்த்தல், கைகளால் தொடுதல், மூக்கினுல் வாசனையறிதல், நாக்கினுல் சுவையறிதல், காதுகளினுல் கேட்டல், மனதினுல் ஊஹித்தல்) மதிக்ஞானமாகும்.

2. ஸ்ருதக்ஞானம் இருவகை:—1. மதிக்ஞானத்தினுல் அறிந்ததை விசேஷித்தறிதல், பாவஸ்ருதமாகும். 2. சாஸ்திரத்தினுலறிதல் திரவ்யஸ்ருதமாகும். இது அங்கபாஹ்யம், அங்கப்பிரவிஷ்டம் என இருவகையாகும்.

இவைகளை 2-ம் 3-ம் புஸ்தகங்களில் விவரிக்கப்படும்.

3. அவதிக்ஞானம்— ஐம்புலன்களின் உதவியின்றி ஆத்மனுல் அளவுடன் அறிதல். இது பவப்பிரத்யயாவதி, குணப்பிரத்யயாவதி என்றும் தேசாவதி, பரமாவதி, ஸர்வாவதி என்றும் அநேக பேதங்களாக இருக்கின்றன.

4. மனப்பர்யயக்ஞானம்—பிறர் மனத்தில் நினைத்ததையறிதல். இது ருஜு மதி என்றும் விபுலமதி யென்றும் இருவகையாகும்.

ருஜு மதி—ஸ்தூலபத்தையறிதல். விபுலமதி—கடினத்தை யறிதல்.

5. கேவலக்ஞானம்—உலகத்திலுள்ள பொருள்களை முற்றுமுணர்தல்.

12. ஸம்யக் சாரித்திரம் (நல்லொழுக்கம்)

காட்சியுடையார் வினைவரும் வாயிலின்
மீட்சியா் நல்லொழுக்கு நன்று. (அருங்கலச்செப்பு)

நற்காட்சியுள்ளவர்கள் தன்னுத்மனிடத்தில் வரும் கருமங்களை வரவொட்டாமல் தடுத்தல் நல்லொழுக்கமாகும்.

நல்லொழுக்கம்—அணுவிரதம், மஹாவிரதம் என இருவகையாகும்.

1. அணுவிரதம்—பெரிய கொலை, பொய், களவு, காமம், பொருள் பற்று (பரிக்கிரஹம்) இவைகளைச் செய்யாமல் விடுதல்.

2. மஹாவிரதம்—கொலை முதலிய பஞ்ச பாபங்களை மனம், வாக்கு, காயங்களால் செய்யாமையோடு, செய்வித்தல், ஆமோதித்தலின்மை.

பஞ்சாணு விரதங்கள்—1. அஹிம்ஸாணு விரதம் (ஈ, எறும்பு, புழு, பூச்சி முதலான த்ரஸஜீவன்களை வதையாமை) 2. ஸத்யாணு விரதம்—(பொய் வசனங்களைப் பேசாமை) 3. அஸ்தேயாணு விரதம்—(பிறர் கொடாத பொருளைக்

கொள்ளாமை) 4. பிரம்மசர்யாணு விரதம், ஸ்வதார சந்தோஷ விரதம், பரதார நிவர்த்தி—(தன் மனைவியைத் தவிர இதர மாதர்களை விரும்பாமை) 5. பரிமித பரிக்கிரஹாணு விரதம்—(நிலம், வீடு, முதலான பொருள்களை மிதமாகக் கொள்ளல்.)

பஞ்ச மஹாவிரதங்கள்.

1. **அஹிம்ஸாமஹாவிரதம்**—த்ரஸ, ஸ்தாவர ஜீவன்களை மனம், வாக்குக் காயங்களினால் வதையாமை.

2. **ஸத்யமஹாவிரதம்**—ஆத்மஹிதமான வசனங்களைத் தவிர மற்ற வசனங்களைப் பேசாமை.

3. **அஸ்தேயமஹாவிரதம்**—மன, வசன, காயங்களினால் பிறர் பொருளைக் கொள்ளாமை.

4. **பிரம்மசர்ய மஹாவிரதம்**—மன, வசன, காயங்களினால் பெண்களையும், பசு, எருமை முதலியவைகளையும், தேவஸ்திரீகளையும், படத்திலிருக்கும் பெண் உருவங்களையும் விரும்பாமையுடன் வெளிவியவஹாரத்தையும் நீக்கி ஆத்மத்தியானத்திலிருத்தல்.

5. **அபரிக்கிரஹ மஹாவிரதம்**—உள்பற்றுக்களையும், வெளிப்பற்றுக்களையும் முற்றும் துறத்தல்.

குணவிரதங்கள்.

I. **மூலகுணம்**—கள், புலால், தேன், பஞ்சோதும்பரம் இவைகளை உண்ணுமையை மூலகுணமென்று சிலரும், கள், புலால், தேன் இவைகளை உண்ணுமையுடன் பஞ்சாணு விரதத்தையும் அனுஷ்டித்தல் மூலகுணமென்று சிலரும் கூறுவர்.

" எதாவதா, விநாப்யேஷ,. ஸ்ராவகோ, நாஸ்தி, நாமத, : " கள், புலால், தேன், பஞ்சோதும்பரம் இவைகளை விடாதவன் பெயருக்கும் ஜைனனுகமாட்டான்.

II. உத்தரகுணம் மூவகை :—

1. திக்விரதம்—கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, மேல், கீழ் என்னும் பத்து திக்குகளிலும் இவ்வளவு தூரத்திற்குமேல் போவதில்லையென்றுநியமம்செய்தல்.

2. அனர்த்த தண்டவிரதம்—பிரயோஜனமற்ற (பலனற்ற) வேலைகளைச் செய்யாதிருத்தல். இது ஐவகை.

(1) அபத்யானம் (தீச்சிந்தை)—பிறன்மனைவி முதலானவர்களையும் பொருள்களையும் கெடுக்கவேண்டுமென நினைத்தல்.

(2) பாபோபதேசம்—கொலைக்குக் காரணமான வசனங்களை யுபதேசித்தல்.

(3) பிரமாதசர்யம்—பிரயோஜனமில்லாமல் மரத்தை வெட்டுவதும், செடியை அறுப்பதும், துரும்பைக் கிள்ளுவதும், பூமியைக் கீறுவதும் (கிளறுவதும்) நெருப்பெரிப்பதும் பிரமாத சர்யமாகும்.

(4) ஹிம்ஸாதானம்—கொலைக்குக் காரணமான மண்வெட்டி, கொடுவாள், அரிவாள், நெருப்பு, விஷம், கயிறு, தடி, சீப்பு, ஈர்கொள்ளி, (ஈர்கொல்லி) முதலானவைகளைக்கொடுத்தல் ஹிம்ஸா தானமாகும்.

(5) துஸ்ஸ்ருதி—பாபத்திற்குக் காரணமாகிய சாஸ்திரங்களைப் படித்தல், கேட்டல், சிந்தித்தல் முதலியன துஸ்ஸ்ருதியாகும்.

3 போகோபபோகபரிமாணம்—ஒருதரம் அனுபவித்து மறுபடி அனுபவிப்பதற்கு யோக்யமற்ற தாம்பூலம்,சந்தனம், பூமாலை, உணவு முதலான போகப் பொருள்களையும், திரும்பத் திரும்ப (அடிக்கடி) அனுபவிப்பதற்குத் தக்க கட்டில், மெத்தை, வாஹனம், வஸ்திரம், ஆபரணம், மனைவி முதலான உபபோகப் பொருள்களையும்

அளவு செய்து விடுதல் (இவ்வளவுக்குமேல் ஸ்வீகரிப்ப தில்லையென்று மிதம் செய்து கொள்ளுதல்)

இந்த விரதமானது இருவகையாகும் :—

1. இயமவிரதம்—(யாவஜ்ஜீவம்) ஜீவிதமுள்ளவரையில் அனுஷ்டித்தல்.

2. நியமவிரதம்—சக்திக்குத் தக்கவாறு இவ்வளவு காலம் வரை யென்று நியமம் செய்துகொள்ளுதல்.

சிக்ஷாவிரதம்.

1. தேசாவகாசிகவிரதம்—இவ்வளவுகாலம்வரைக்கும் இன்னதேசத்திற் (இடத்திற்) கப்பால் போவதில்லை என்று நியமம் செய்தல்.

2. ஸாமாயிகவிரதம்—மனம், வாக்குக் காயங்களால் உண்டாகும் பாபங்களைத் தடுத்து ஆத்மத்யானம் செய்தல்.

3. ப்ரோஷதோபவாஸவிரதம்—சதுர்த்தசி, அஷ்டமி முதலான நாட்களில் உண்பன (அன்னம்) பருகுவன (பானம்) தின்பன (காத்யம்) நக்குவன (லேஹ்யம்) என்னும் நான்குவகை ஆஹாரங்களை விடுதல்,

4. வையாவிருத்யம் அல்லது அதிதிஸம்விபாகம்—அன்னம், ஔஷதம், அபயம்,(ஆவாஸம்) கல்வி (சாஸ்திரம்) இவைகளைத் தானம் செய்தல்,

13. இல்லறத்தார்களின் பதினொரு நிலைகள்.

1. தரிசினிகன்—விரதங்களை அனுஷ்டியாது ஸம்யக் தரிசனத்தை மாத்திரம் உடையவன்.

2. விரதிகன்—ஸம்யக்தரிசனத்துடன் அணுவிரதம், குணவிரதம், சிக்ஷாவிரதம் இவைகளை யாசரிப்பவன்.

3. ஸாமாயிகன்–காலே, மாலே, மத்யானம் இம்மூன்று வேளேகளிலும் ஸாமாயிகம், (ஜபம், த்யானம், ஸ்துதிகளே) செய்பவன்.

4. ப்ரோஷதோபவாசன்—அஷ்டமி, சதுர்த்தசி தினங்களில் உபவாஸ விரதமுள்ளவன்.

5. ஸச்சித்தவிரதன்—நன்ருகப் பழுக்காத பச்சைக் காய்களேப் புசியாதவன்.

6. இராத்திரி புக்தவிரதி (ராத்திரிஅபுக்தன்)—இரவில் நான்கு வகை உணவுகளே யுண்ணுதவன்.

இராத்திரி பக்தவிரதி—இரவில் மாத்திரம் ஸ்திரீஸம்ஸர்க்கம் செய்பவன்.

திவாமைதுனத்யாகி } பகலில் காமஸேவை செய்யாதவன்.
திவாபிரம்மசாரி }

7. பிரம்மசர்யன்—ஸ்திரீபோக வாழ்க்கையைத் துறந்தவன்.

8. அநாரம்பன்—உழவு முதலான தொழில்களே விட்டவன்.

9. அபரிக்கிரஹன்—பரிக்கிரஹத்தில் (பொருள் பற்றுக்களில்) மனத்தைச் செலுத்தாமலிருப்பவன்.

10. அனனுமதன்—உலக சம்பந்தமான யாதொரு வேலேகளிலும் உடன் படாதவன்.

11. உத்திஷ்ட பிண்டத்தியாகி—வீடு முதலிய பற்றுக்களே விட்டுத் தபஸ்விகளிடம் தீக்ஷைப்பெற்றுப் பிக்ஷா விருத்தியுடன் தபம் செய்பவன் அல்லது தனக்காகச் செய்த உணவை யுட்கொள்ளாதவன் என்ருல் இவ்விரதமுள்ளவன் வந்ததைக் கண்டு இவனே விசாரித்து இவனுக்காகச் செய்த உணவைக் கொள்ளாமல் இல்லறத்தார் தமக்காகச் செய்து வைத்த உணவைக்கொடுத்தால் உட்கொள்ளுபவன்.

இவ்விரதமுள்ளவர்-க்ஷுல்லகன், ஐலகன் என இருவகையாகும். க்ஷுல்லகன்—ஒருதுண்டு துணியும், பிராணிகளை ரக்ஷிப்பதற்காக (உட்காரும்போது தரையில் ஈ, எறும்பு, போன்றவையில்லாமல் தள்ளிவிட்டு உட்காருவதற்காக) மயில் பிச்சமும், கை, கால், சுத்தம் செய்ய கமண்டலமும் உள்ளவன். இவன் கத்தியினால் அல்லது கத்தரியினால் க்ஷவரம் செய்து கொள்ளுவதும், உட்கார்ந்து பாத்திரத்தில் உண்ணுவதும் உள்ளவனாகும்.

ஐலகன்-கௌபீனம் (கோமணம்) மாத்திரமும், மயில் பிச்சமும், கமண்டலமும் உள்ளவன் இவன் க்ஷுல்லகனைப் போல் கத்தியினால் க்ஷவரம் செய்து கொள்ளாமல், கையினால் தலைமயிரை லோசம் செய்துக் கொள்வதும், பாத்திரமின்றி கையில் உண்ணுவதும், வஸ்திரமின்றி தரையில் படுத்தலும் உள்ளவனாகும்.

14. இல்லறத்தார்களின் காலைக்கடமை.

அதிகாலையில் படுக்கையின் வலது பக்கமாக எழுந்து கிழக்கு முகமாக உட்கார்ந்து, நான் அநாதி காலத்திலிருந்து பயங்கரமான ஸம்ஸார சமுத்திரத்தில் மூழ்கி, கரைகாணாமல், திக்கற்றுத் திகைத்து இப்பொழுது படகைப்போன்ற ஜினனுரைத்த இல்லறத்தை அடைந்துள்ளேன். இக்காலத்தில் துறவறம் தரிப்பதரிதாதலால் இவ்வில்லறத்தை எவ்விதமாகினும் உயிருள்ள வரையில் தரிப்பேன், என்ற நினைப்புடன் பஞ்ச நமஸ்காரம் (ஜபம்) செய்த பிறகு ஸ்நான சுத்தியுடன், அக்ஷதை முதலிய பொருள்களைக் கையிலேந்திப் பிராணி ஹிம்ஸையின்றி, மெதுவாக கீழ்நோக்கி நடந்து கோவிலினருகில் சென்று வாசற்படி நுழையும்போது, ஹே துவாரபாலகர்களே! நான் ஜினவந்தனைக்காக அல்லது பூஜைக்காக போகின்றேன், எனக்கு வழிவிட வேண்டுமென்று கேட்டு, ஜினாலயத்தினுட் சென்று மானஸ்தம்பத்தை நோக்கி நமஸ்கரித்து, நான்கு திக்குகளிலும் மும்மூன்று ஆவர்த்தனைகளுடன் மூன்று சுற்று வலம் (வலமாக)

வந்து, ஜினபிம்பத்தின் வலப்பக்கம் நின்று, தேவாதிதேவ பரமாத்மனே! வீதராகப் பிரபுவே! உன்னைக்கண்ட மாத்திரத்தில் என்னுடைய ஜென்மம் ஸபலமாயிற்றென்கிற ஸ்துதியுடன் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்தபிறகு அர்ச்சனையும் செய்து ஸ்வாமியின் உத்தரவு பெற்று எதிர்முகமாகவே வெளிவரவேண்டும்.

குறிப்பு:— இருகரங்களையும் கூப்பி மூன்றுதரம் வலமுறையாகக் கைகளைச் சுற்றுதல் ஆவர்த்தனையாகும்.

இருகால்கள், இருகைகள், மார்பு, தலை, இருகன்னங்கள், பூமியில் படியும்படி வணங்குதல் (நமஸ்கரித்தல்) ஸாஷ்டாங்க நமஸ்காரமாகும்.

15. இல்லறத்தார்களின் நித்திய கடமை.

1. தேவபூஜை—ஸ்வாமிக்கு நித்ய நைமித்திகப்பூஜைகளைச் செய்தல் அல்லது செய்வித்தல்.

2. குருபாஸ்தி—பெரியோர்களைக்கண்டால் எழுந்திருத்தல், அவர்சென்றால் பின்தொடர்தல், அவர் முன் வீண் வார்த்தைப் பேசாதிருத்தல் அவரை எதிரிலும், மறைவிலும் வணங்குதல், தன்னாலியன்ற தொண்டுபுரிதல் முதலியன குருபாஸ்தியாகும்.

3. ஸ்வாத்தியாயம்—நல்ல பயனைத்தரும் நூல்களை, வாசித்தல், கேட்டல், நினைத்தல், சுத்தமாக உச்சரித்தல், தனக்குத் தெரிந்தவரையில் பிறருக்கு தருமோபதேசம் செய்தல் முதலியன ஸ்வாத்தியாயமாகும்.

4. ஸம்யமம்—விரதமனுஷ்டித்தல், நெய், பால், தயிர் முதலிய பொருள்களை நியமம் செய்துவிடுதல், ஐம்புலன்களை யடக்குதல், பிராணிகளைக் காப்பாற்றுதல் முதலியன ஸம்யமமாகும்.

5. தபம்—காலை, மாலைகளில் ஜபம் ஸாமாயிகம், கிரியாபாடம் முதலியவைச் செய்தல் அல்லது உபவாஸ

முதலான பன்னிரண்டுவித தபங்களைச்செய்தல் தபமாகும்.

6. தானம்—தனக்கும், பிறருக்கும் உபயோகமாகும் பொருட்டு அன்னம் முதலியவைகளைக் கொடுத்தல் தானமாகும்.

இல்லறத்தார் தொழில்கள் ஆறு.

1. அஸி(வாள்)-வாள்முதலான கருவிகளால்ஜீவித்தல்

2. மஸி(வரைவு)—எழுத்து வேலை செய்து ஜீவித்தல்.

3. கிருஷி (உழவு)—பயிர்செய்து ஜீவித்தல்.

4. வாணிஜ்யம் (வாணிபம்)—வியாபாரம் செய்து ஜீவித்தல்.

5. வித்யா (வித்தை)—சஸ்த்ர, சாஸ்திர வித்தைகளைப் பயிர்ச்சி செய்வித்து ஜீவித்தல்.

6. சில்பம்—சிற்பவேலை செய்து ஜீவித்தல்.

16. ஸப்த தத்வம்.

ஜீவன் முதலான ஏழு பொருள்கள் அவையாவன :—

1. ஜீவன்—உயிருள்ள (அறிவுள்ள) பொருள்.

2. அஜீவன்—உயிரற்ற (அறிவற்ற) பொருள்.

3. ஆஸ்ரவம்—நல்வினைத் தீவினைகள் வருதல்.

4. பந்தம்—ஆன்மாவினிடம் நல்வினைத் தீவினைகள் வந்து சேர்தல்.

5. ஸம்வரம்—வினைவரும் வாயிலைத் தடுத்தல்.

6. நிர்ஜரை—ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகளில் சிலவற்றை விலக்குதல்.

7. மோக்ஷம்—ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகளை முற்றும் துறத்தல்.

ஜீவன்—ஸம்ஸாரி யென்றும், முக்தனென்றும் இருவகையாகும்.

ஸம்ஸாரீஜீவன்-வினையின் சேர்க்கையினால் இறப்பு பிறப்பு மூப்பு முதலான துக்கங்களையும், நாக, (திர்யக்) திரியஞ்ச, மனுஷ்ய, தேவ என்னும் நான்கு கதிகளையும் அடைந்து இந்திரியம், பலம், ஆயுஷ்யம், ஸ்வாஸோச்வாஸம் என்னும் நான்கு பிராணன்களினால் ஜீவிப்பவன் ஸம்ஸாரீ ஜீவனாகும்.

இது ஸ்தாவரமென்றும், த்ரஸமென்றும் இருவகை யாகும்.

I **ஸ்தாவரஜீவன்**—ஸ்தாவரநாம கருமோதயமுள்ள தாயும், இடம்விட்டுச் செல்ல வியலாதவைகளாயும் உள்ள மரம், செடி, கொடி, புல், பூண்டு முதலியன ஸ்தாவர ஜீவனாகும்.

II. **த்ரஸஜீவன்**—த்ரஸநாம கருமோதயமுள்ளதாயும் ஒரு இடத்தைவிட்டு மற்றோரிடத்திற்குத் தானாகச் செல்லக் கூடியவைகளாயும் உள்ள புழு, பூச்சி, எறும்பு, வண்டு, தும்பி, ஈ, பசு, பக்ஷி, மனிதன், தேவன், நாரகன் முதலியன த்ரஸ ஜீவனாகும். இவை ஏகேந்திரியம், த்வீந்திரியம், த்ரீந்திரியம், சதுரிந்திரியம் பஞ்சேந்திரியம் என ஐவகையாவன.

1. **ஏகேந்திரிய ஜீவன்**—மெய் என்னும் ஓரறிவுள்ள பிருத்வீ, அப்பு, தேஜ, வாயு, வனஸ்பதி காயஜீவன்கள் (மரம், செடி, கொடி, நிகோதம், மண், கல், நெருப்பு, காற்று முதலானவைகளை உடலாகக் கொண்ட ஜீவன்கள்) ஏகேந்திரிய ஜீவனாகும்.

2. **த்வீந்திரிய ஜீவன்**—மெய், வாய், என்னும் ஈரறிவுள்ள புழு, பூச்சி முதலானவைகள் த்வீந்திரிய ஜீவனாகும்.

3. **த்ரீந்திரிய ஜீவன்**—மெய், வாய், மூக்கு, என்னும் மூவறிவுள்ள எறும்பு முதலானவைகள் த்ரீந்திரிய ஜீவனாகும்

4. **சதுரிந்திரிய ஜீவன்**—மெய், வாய், மூக்கு, கண் என்னும் நாலறிவுள்ள வண்டு தும்பி முதலானவைகள் சதுரிந்திரிய ஜீவனாகும்.

5. பஞ்சேந்திரிய ஜீவன்—மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் ஐயறிவுள்ள சாரைப்பாம்பு. ஓணன், உடும்பு முதலானவைகள் அஸம்ஞீ பஞ்சேந்திரிய ஜீவனாகும்.

மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம் என்னும் ஆறறிவுள்ள பசு, யானை, குதிரை, நாய், மனிதன் முதலானவர்கள் ஸம்ஞீ பஞ்சேந்திரிய ஜீவனாகும்.

குறிப்பு :—மேற்கூறிய நான்கு பிராணன்கள் உட்பிரிவுகளினால் பத்துவகை அவையாவன.

பஞ்சேந்திரியம் (மெய், வாய், மூக்கு, கண், செவி) மூன்று பலம் (மனம் வாக்கு, காயம்) ஆயுஷ்யம் ஸ்வாஸோச்வாஸம் ஆகிய இவைகள் பத்தாகும். இவற்றுள் ஏகேந்திரிய ஜீவனுக்கு மெய், காயபலம், ஆயுஷ்யம், ஸ்வாஸோச்வாஸம் என்னும் நான்கு பிராணன்களிருக்கும். த்வீந்திரிய ஜீவனுக்கு மெய், வாய், காயபலம், வாக்பலம், ஆயுஷ்யம் ஸ்வாஸோச்வாஸம், இவ்வாறு மிருக்கும். த்வீந்திரிய ஜீவனுக்கு மேற்கூறிய ஆறுடன் மூக்கு சேர்ந்து ஏழுளதாகும். சதுரிந்திரிய ஜீவனுக்கு மேற்கூறிய ஏழுடன் கண் சேர்ந்து எட்டாகும். அஸம்ஞீ பஞ்சேந்திரிய ஜீவனுக்கு எட்டுடன் செவி சேர்ந்து ஒன்பதாகும். ஸம்ஞீபஞ்சேந்திரியஜீவனுக்கு ஒன்பதுடன் மனோபலம் சேர்ந்து பத்தாகும்.

அஸம்ஞீ—உபதேசத்தை யறியும் தன்மையும், மந்திரம் முதலானவைகளை ஸ்வீகரிக்கும் தன்மையுமற்றது (மனமற்றது.)

ஸம்ஞீ—உபதேசத்தை யறியும் தன்மையும், மந்திர முதலானவைகளை ஸ்வீகரிக்கும் தன்மையுமுள்ளது (மனமுள்ளது)

மெய்—ஸ்பரிசித்தல். வாய் அல்லது நாக்கு சுவை யறிதல், மூக்கு—துர்நாற்றம், நறுநாற்றம் அறிதல். கண்—ரூப மறிதல். செவி—சப்தங்கேட்டல்.

2. முக்தஜீவன்—ஸம்ஸார துக்கங்களுக்குக் காரண மான கருமங்களிலிருந்து விடுபட்டு என்று மழிவில்லாத நிஜாத்ம ரூபத்தை யடைந்தவன் முக்த ஜீவனாகும்.

17. நவ பதார்த்தம்.

ஜீவன் முதலான ஏழு தத்துவங்களுடன் புண்ணியமும் பாபமும் சேர்ந்து ஒன்பது பதார்த்தங்களாகும். அவையாவன :—

1. ஜீவ பதார்த்தம்.
2. அஜீவ பதார்த்தம்.
3. ஆஸ்ரவ பதார்த்தம்.
4. பந்த பதார்த்தம்.
5. ஸம்வர பதார்த்தம்.
6. நிர்ஜரா பதார்த்தம்.
7. மோக்ஷ பதார்த்தம்.
8. புண்ணிய பதார்த்தம்.
9. பாப பதார்த்தம்.

ஷட் திரவியம்.

ஸப்த தத்வத்தில் கூறிய ஜீவன் ஒன்றும் அஜீவ பேதங்களான புத்கல முதலான ஐந்தும் சேர்ந்து ஆறு திரவ்யங்களாகும் அவையாவன :—

1. **ஜீவன்**—உயிருள்ள பொருள்.

2. **புத்கலம்**—உயிரற்ற பொருள். (வண்ணம், சுவை, நாற்றம், ஸ்பர்சம் இவைகளுள்ளதாயும், ஐம்புலன்களுக்குத் தோன்றக்கூடியவைகளாயும் உள்ள பொருள்கள்.)

3. **தருமம்**—ஒரு இடத்தைவிட்டு மற்றோர் இடத்திற்குதானகச்செல்லும் தன்மையுள்ள ஜீவ, புத்கலங்களுக்கு (நீந்தும் தன்மையுள்ள மீனுக்கு நீந்த தண்ணீர் உதவி புரிவதுபோல்) ஸஞ்சரிக்க உதவிபுரியும் திரவ்யம் தருமமாகும்.

குறிப்பு:—உலகத்தில் வழங்கும் தருமம், புண்ணிய பாபரூபமாகும். இத்தருமத் திரவ்யமானது ஐம்புலன்களுக்குத் தோன்றாததாயும், முற்றுமுணரும், தன்மையுள்ள பரமாத்மகோசரமாயும் உள்ளதாகும், இது இல்லாவிடில் பிராணிகள் ஒரு இடத்தைவிட்டு மற்றோரிடம் ஸஞ்சரிக்க முடியாதென பரமாகமத்தில் கூறப்பட்டிருக்கிறது.

4. **அதருமம்**—தங்கும் தன்மையுள்ள ஜீவ, புத்கலங்களுக்கு (வழிபோக்கர்களுக்கு நிற்க மரம் நிழலைத்தருவது போல்) நிற்க உதவி புரியும் திரவ்யம் அதர்மமாகும். இது இல்லாவிடில் பொருள்கள் நிலைக்கமாட்டா.

எப்படியெனில் பறவைக்கு பறக்க இரக்கையும் நிற்க கால்களும், இல்லாவிடில் பறக்கவும் நிற்கவும் முடியாதோ, அப்படியே இவ்வுலகில் தர்மமும், அதர்மமும், இல்லாவிடில் ஜீவ புத்கலங்கள் செல்லவும், நிற்கவும் முடியாது.

5. **ஆகாயம்**—ஜீவன் முதலான ஐந்து த்ரவ்யங்களுக்கும் நிலைக்க இடமளிக்கும் திரவ்யம்.

6. **காலம்**—குயவன் சக்ரம் சுற்றுவதற்கு சக்ரத்தின் கீழ் இருக்கும் கல் காரணமாயிருப்பதுபோல், தானாக வளரும் திரவ்யங்களை வளர வைக்கவும் தானாக அதிகநாள் வசிக்கும் திரவ்யங்களை வசிக்க வைக்கவும், உள்ளது கால திரவ்யமாகும். இக்காலத்திரவ்யம் வியவஹார காலம், நிச்சய காலம் என இருவகையாகும்.

வியவஹார காலம்—சமயம், நாழிகை, முஹூர்த்தம் பகல், ராத்திரி, பக்ஷம், மாஸம், அயனம், வருஷம் முதலியவைகள் வியவஹார காலமாகும்.

நிச்சய காலம்—வர்த்தனு லக்ஷண முள்ளதாகும்.

பஞ்சாஸ்திகாயம்.

மேற்கூறிய ஆறு த்ரவ்யங்களில் கால மொழிய மற்றைந்தும் அஸ்திகாயங்களாகும் அவையாவன :—

1. ஜீவாஸ்தி காயம்.
2. புத்கலாஸ்தி காயம்.
3. தர்மாஸ்தி காயம்.
4. அதர்மாஸ்தி காயம்.
5. ஆகாசாஸ்தி காயம்.

குறிப்பு :—அஸ்தி—தோன்றுதலும், அழிதலும், இல்லாமல் அனாதி காலத்திலிருந்து இருத்தலால் அஸ்தி யெனப்பட்டது.

காயம்—அநேகப் பிரதேசங்களையுடைய சரீரத்தைப்போல் அநேகப் பிரதேசங்களுள்ளதால், காயமெனப்பெயர் வந்தது.

பிரதேசம்—மறுபடியும் துண்டிக்க முடியாத சிறிய அணுவானது தங்குமிடம் ஒரு பிரதேசமாகும். அப்பேர்பட்ட பிரதேசம் காலத்திற்கு ஒன்றேயுளதாகும். அதனால் காலமானது காயமாகிறதில்லை. அஸ்திமாத்திரமுளது.

18. கதிகள்.

ஜீவனுடைய (பர்யாயத்திற்கும்) மாறுதலுக்கும் ஜீவன் மறுபிறப்பை யடைவதும் கதி யெனப்படும்.

இக்கதியானது—நரககதி, திரியஞ்சகதி, மனுஷ்யகதி, தேவகதி யென நால்வகையாகும்.

1 நரககதி—பிறந்தநாள் முதல்கொண்டு இறக்கிற வரைக்கும் இரவும் பகலும் ஸஹிக்கமுடியாத அநேக விதத் துன்பங்களும், மண் உணவும், துர்க்கந்தமும் உள்ள நரகங் களில் பிறப்பது, நரககதியாகும்.

2. திரியஞ்ச கதி—மரம், செடி, கொடி, புல், பூண்டு, புழு, பூச்சி, எறும்பு, ஈ, பசு, பக்ஷி, யானை, குதிரை முதலான விலங்கு ஜாதியில் உதிப்பது திரியஞ்ச கதியாகும்.

3. மனுஷ்யகதி—போகபூமியிலும், கர்மபூமியிலும், ஆண், பெண்களாக ஜனிப்பதற்கு மனுஷ்யகதியெனப்பெயர்.

4. தேவகதி—இரவும் பகலும் அநேகவித ஸுகத் தை யனுபவிக்கக்கூடிய பவண, வியந்திர, ஜோதிஷ்க வைமா னிகர்களாகப் பிறப்பது தேவகதி யெனப்படும்.

குறிப்பு :—பெரும் பாபகார்யத்தைச் செய்பவர்கள் நரக கதியை யடைகிறார்கள். சிறிய பாப கார்யத்தைச் செய்பவர்கள் திரியஞ்ச கதியை யடைகிறார்கள். சிறிது புண்ணியம் செய்த வர்கள்மனுஷ்ய கதியில் பிறக்கிறார்கள்.

மிகு புண்ணியத்தைச் செய்தவர்கள் தேவகதியி லுதிக்கிறார்கள். புண்ணியமும் பாபமும் அற்றவர்கள் மோக்ஷத்தை யடைகிறார் கள் என்றால், நரக முதலான நான்கு கதிகளிலிருந்து நீங்கின வர்கள் முக்த ஜீவன்கள். நரக முதலான நான்கு கதிகளிலிருப் பவர்கள் ஸம்ஸாரி ஜிவன்கள்.

19. நிகழ்கால திரிஷஷ்டிசலாகா புருஷர்கள்.
(பிரஸித்திபெற்ற அறுபத்துமூவர்)

தீர்த்தங்கரர்கள் இருபத்திநால்வர், சக்ரவர்த்திகள் பன் னிருவர், வாஸுதேவர்கள் ஒன்பதின்மர், பிரதி வாஸு

தேவர்கள் ஒன்பதின்மர், பலபத்ரர்கள் ஒன்பதின்மர் ஆக அறுபத்து மூவராவர்.

தீர்த்தங்கரர்—ஸம்ஸார துக்கங்களுக்குக் காரணமான கருமங்களைக்கெடுத்து, லோகாலோகத்தையறியும் ஞானமடைந்தவர். இவர் தேவர்களால் அமைக்கப்படும் ஸமவஸரணத்தில் (தருமோபதேசம் செய்யும் ஸபையில்) இருந்து ஸம்ஸார பிராணிகளின் நன்மைக்காக உபதேசிப்பவர்.

நிகழ்கால இருபத்துநான்கு தீர்த்தங்கரர்களுடைய பெயர்கள்

1.	விருஷப	9.	புஷ்பதந்த	17.	குந்து
2.	அஜித	10.	சீதள	18.	அர
3.	சம்பவ	11.	ஸ்ரேயாம்ஸ	19	மல்லி
4.	அபிநந்தன	12.	வாஸுபூஜ்ய	20.	முனிஸுவிரத
5.	ஸுமதி	13.	விமல	21.	நமி
6.	பத்மப்பிரப	14.	அனந்த	22.	நேமி
7.	ஸுபார்ஸ்வ	15.	தர்ம	23.	பார்ஸ்வ
8.	சந்திரப்பிரப	16.	சாந்தி	24.	வர்த்தமான

சக்ரவர்த்தி—முப்பத்தீராயிரம் அரசர்களுக்கு அதிபதியாகி, சக்ரம் முதலான பதினான்கு ரத்னங்களையும் காளமுதலான ஒன்பது நிதிகளையும் பெற்று பரதநாடு முழுமையும் ஆண்டவர் சக்ரவர்த்தியாகும்.

நிகழ்கால பன்னிரண்டு சக்ரவர்த்திகளின் பெயர்கள்,

1.	பரதன்	5.	சாந்தி	9.	பத்மநாபன்
2.	சகரன்	6.	குந்து	10.	ஹரிஷேணன்
3.	மகவன்	7.	அர	11.	ஜயஸேனன்
4.	ஸநத்குமாரன்	8.	ஸுபௌமன்	12.	பிரம்மதத்தன்

பதினான்கு ரத்தினங்கள்.

1. **சக்ரம்**—சக்ரவர்த்தி திக்விஜயத்திற்குப் புறப்படும்பொழுது எல்லாவற்றிற்கும் முன்செல்லும் கருவி.

2. **சத்ரம் (குடை)**—சேனைகளை மழையின் தொந்தரவின்றிக் காப்பாற்றும் கருவி.

3. கட்கம்—கத்தி

4. தண்டம்(தடி)—சேனைகள் செல்லும்வழியை மேடு பள்ளமின்றி ஸமமாகச்செய்யும் கருவி.

5. மணி, 7 காகினி-இவைகளிரண்டும் சேனைகள் செல்லும்போது இருளைப்போக்கும் கருவி.

6. சர்ம(தோல்)—சமுத்திரத்தில் ஜலத்தின் அபாயமின்றி சேனைகளை யேற்றிச்செல்லும் கருவி.

8. கிருஹபதி—வீடு முதலானவைகளை யமைப்பவன்.

9. ஸேநாபதி—சேனைத்தலைவன்.

10. தக்ஷகன் (ஸ்தபதி)—வஸதியமைப்பவன்.

11. புரோஹிதன்—நன்மை தீமைகளை யறிவிப்பவன்.

12. அச்வ(குதிரை)—நீரிலும் நிலத்திலும் சமானமாகச் செல்லக்கூடியது.

13. கஜம் (யானை)—பட்டத்துயானை.

14. ஸ்த்ரீ—பட்டத்தரசி.

நிதிகள் ஒன்பதாவன.

1. காளம்—வீணை, குழல், மத்தளம் முதலான வாத்தியங்களைக் கொடுக்கும் நிதி.

2. மஹாகாளம்—உழவு, வாணிபம், வரைவு, வாள் வித்தை, சில்பங்களை முடிக்கும் கருவிகளைத் தரும் நிதி.

3. பாண்டுகம்—நல்ல அறுசுவையுடன் கூடின உணவைத் தரும் நிதி.

4. மாணவம்—ஆயுதங்களையும், நீதி சாஸ்திரங்களையும் தரும் நிதி.

5. சங்கு—நகார் முதலான வாத்தியங்களை தரும் நிதி.

6. நைஸர்ப்பம்—படுக்கை, மனை முதலானவைகளைத் தரும் நிதி.

7. பத்மம்—விலையுயர்ந்த பட்டாடைகளைத்தரும்நிதி.

8. பிங்கலம்—நல்ல நகைகளைத்தரும் நிதி.

9. நாநாரத்னம்—அநேகவித ரத்னங்களைத் தரும்நிதி.

வாஸுதேவன்--பதினாறாயிரம் அரசர்களுக்கு அதிபதியாகி சக்ரம் முதலான ஏழு ரத்னங்களை யடைந்து பாதி பரத நாட்டை ஆண்டவன் அர்த்த சக்ரவர்த்தி அல்லது வாஸுதேவனாகும்.

நிகழ்கால ஒன்பது வாஸுதேவர்களின் பெயர்கள்.

1. திரிபிருஷ்டன்	4. புருஷோத்தமன்	7. தத்த தேவன்
2. த்விபிருஷ்டன்	5. நர(புருஷ)ஸிம்மன்	8. லக்ஷ்மணன்
3. ஸ்வயம்பு	6. புண்டரீகன்	9. கிருஷ்ணன்

ஏழு ரத்னங்களாவன.

1. ஸுதர்சனமென்னும் சக்ரம்
2. கௌமோதகியென்னும் தண்டம்
3. அமோகமென்னும் வேல்
4. ஸௌநந்தனமென்னும் வாள்
5. சார்ங்கமென்னும் வில்
6. கௌஸ்துபமென்னும் ரத்னம்
7. பாஞ்சஜன்யமென்னும் சங்கு

பிரதிவாஸுதேவன்—வாஸுதேவனுக்குச்சமானமான ஐஸ்வரியம் நாடு முதலானவைகளுள்ளவன் பிரதிவாஸுதேவனாகும்.

நிகழ்கால ஒன்பது பிரதிவாஸுதேவர்களின் பெயர்கள்.

1. அச்வக்ரீவன்	4. மதுஸூதனன்	7. பலி
2. தாரகன்	5. மதுக்கிரீடன்	8. ராவணன்
3. மது	6. நிஷும்பன்	9. ஜராஸந்தன்

பலபத்ரன்—வாஸுதேவனுக்கு அண்ணனாகி கலப்பை முதலான நான்கு ரத்னங்களைப்பெற்றுப் பாதி பரதத்தை ஆண்டவன் பலபத்ரனாகும்.

நிகழ்கால ஒன்பது பலபத்திரர்களின் பெயர்கள்.

1. விஜயன்	4. ஸுப்பிரபன்	7. நந்திமித்ரன்
2. அசலன்	5 ஸுதர்சனன்	8. ராமச்சந்திரன்
3. தர்மப்பிரபன்	6. நந்திஷேணன்	9. பத்மன்

நான்கு ரத்தினங்களாவன.

1. அபராஜிதமென்னும் கலப்பை
2. கௌமோதியென்னும் தடி
3. அமோகமென்பது உலக்கை
4. ரத்னவதம் சிகையென்னும் மாலே

20. நிகழ்கால காமதேவர்கள் (மன்மதர்கள்) இருபத்துநால்வர்

1. பாஹுபலி	9. வத்ஸராஜன்	17. நளராஜன்
2. பிரஜாபதி	10. கனகப்பிரபன்	18. அனுமஹான்
3. ஸ்ரீதரன்	11. மேகப்பிரபன்	19. பலிராஜன்
4. தர்சனபத்ரன்	12. சாந்தி	20. வஸுராஜன்
5. பிரஸேனசந்த்ரன்	13. குந்து	21. பிரத்யுமன்னன்
6. சந்த்ரவர்ணன்	14. அர	22. நாககுமாரன்
7. அக்நியுக்தன்	15. விஜயராஜன்	23. ஜீவந்தரன்
8. ஸநத்குமாரன்	16. ஸ்ரீசந்த்ரன்	24. ஜம்புஸ்வாமீ

நிகழ்கால மனுக்கள் பதிநால்வர்.

1. பிரதிஸ்ருதி	6. ஸீமந்தரன்	11. சந்த்ராபன்
2. ஸன்மதி	7. விமலவாஹனன்	12. மருதேவன்
3. க்ஷேமங்கரன்	8. சக்ஷுஷ்மான்	13. பிரஸேனஜித்
4. க்ஷேமந்தரன்	9. யசஸ்வான்	14. நாபிராஜன்
5. ஸீமங்கரன்	10. அபிசந்த்ரன்	

நிகழ்கால நாரதர்கள் ஒன்பதின்பர்.

1. பீமன்	4. மஹாருத்ரன்	7. துர்முகன்
2. மஹாபீமன்	5. காலன்	8. நரகமுகன்
3. ருத்ரன்	6. மஹாகாலன்	9. அதோமுகன்

நிகழ்கால ருத்ரர்கள் பதினொருவர்.

1. பீமபலி	5. ஸுப்பிரதிஷ்டன்	9. ஜிதநாபி
2. ஜிதசத்ரு	6. அசலன்	10. பீடன்
3. ருத்ரன்	7. அஜிதந்தரன்	11. ஸாத்யகி
4. விஸ்வாநலன்	8. புண்டரீகன்	

21 இறந்தகால (பூதகால) தீர்த்தங்கரர்கள் இருபத்துநால்வர்

1. நிர்வாண
2. ஸாகர
3. மஹாஸாது
4. விமலப்பிரப
5. ஸ்ரீதர
6. ஸுதத்த
7. அமலப்பிரப
8. உத்தர
9. அங்கிர
10. சன்மதி
11. ஸிந்து
12. குஸுமாஞ்சலி
13. சிவகண
14. உத்ஸாஹ
15. ஞானேஸ்வர
16. பரமேஸ்வர
17. விமலேஸ்வர
18. யசோதர
19. கிருஷ்ணமதி
20. ஞானமதி
21. சுத்தமதி
22. ஸ்ரீபத்ர
23. அதிக்கிராந்த
24. சாந்த

எதிர்கால (பவிஷ்யத்கால) தீர்த்தங்கரர்கள் இருபத்துநால்வர்

1. மஹாபத்ம
2. ஸுரதேவ
3. ஸுபார்ஸ்வ
4. ஸ்வயம்பிரப
5. ஸர்வாத்மபூத
6. தேவபுத்ர
7. குலபுத்ர
8. உதங்க
9. புரௌஷ்டில
10. ஜயகீர்த்தி
11. முனிஸுவிரத
12. அர
13. நிஷ்பாப
14. நிஷ்கஷாய
15. விபுல
16. நிர்மல
17. சித்ரகுப்த
18. ஸமாதிகுப்த
19. ஸ்வயம்பு
20. அநிவிருத்தக
21. ஜய
22. விமல
23. தேவபால
24. அனந்தவீர்ய

விதேஹ க்ஷேத்ர தீர்த்தங்கரர்கள் இருபது.

1. ஸீமந்தர
2. யுகமந்தர
3. பாஹு
4. ஸுபாஹு
5. ஸஞ்ஜாதக
6. ஸ்வயம்பிரப
7. விருஷபாநந
8. அனந்தவீர்ய
9. ஸுரப்பிரப
10. விசாலகீர்த்தி
11. வஜ்ரதர
12. சந்த்ராநந
13. சந்த்ரபாஹு
14. புஜங்கம
15. ஈச்வர
16. நேமப்பிரப
17. வீரஸேந
18. மஹாபத்ர
19. தேவயச
20. அஜிதவீர்ய

22. மூவுலகம்.

1. அதோலோகம் (கீழ்உலகம்) நாரகர் வசிக்குமிடம்
2. மத்யமலோகம் (நடுஉலகம்) மனிதர் வசிக்குமிடம்
3. ஊர்த்வலோகம் (மேல்உலகம்) தேவர்கள் வசிக்குமிடம்.

அதோலோகம் (நரகங்கள்)

1. ரத்னப்பிரபை
2. சக்ராப்பிரபை
3. வாலுகாபிரபை
4. பங்கப்பிரபை
5. தூமப்பிரபை
6. தமப்பிரபை
7. மஹாதமப்பிரபை

நரகங்களின் மறுபெயர்கள்

1. கர்மை
2. வம்சை
3. மேகை
4. அஞ்சனை
5. அரிஷ்டை
6. மகவி
7. மாகவி

மத்யமலோகம். த்வீபங்கள் (தீவுகள்)

1. ஜம்பூத்வீப
2. தாதகிஷண்ட
3. புஷ்கரவர
4. வாருணீவர
5. க்ஷீரவர
6. க்ருதவர
7. இக்ஷுவர
8. நந்தீச்வர
9. அருணவர

இவைகளைப்போன்ற அநேக த்வீபங்கள் இருக்கின்றன.

சமுத்திரங்கள் (கடல்கள்)

1. லவண
2. காளோத
3. புஷ்கரவர
4. வாருணிவர
5. க்ஷீரவர
6. க்ருதவர
7. இக்ஷுவர
8. நந்தீச்வர
9. அருணவர

இவைகளைப்போன்ற அநேக சமுத்திரங்கள் இருக்கின்றன.

மேருக்கள்.

1. மஹாமேரு
2. மேரு
3. மந்த்ரமேரு
4. ஸுதர்சனமேரு
5. வித்யுன்மாலிநீமேரு

வனங்கள்.

1. பத்ரஸாலவனம்
2. நந்தனவனம்
3. ஸௌமநஸவனம்
4. பாண்டுகவனம்

அரண்யம்.

1. தேவாரண்யம்
2. பூதாரண்யம்

கஜதந்த பர்வதங்கள்.

1. கந்தமாதன
2. மால்யவான்
3. வித்யுத் பிரப
4. ஸௌமநஸ

இரண்டரைத்வீபம்.

1. ஜம்பூத்வீபம்
2. தாதகிஷண்டத்வீபம்
3. புஷ்கரார்த்தத்வீபம்

க்ஷேத்ரங்கள்.

1. பரத
2. ஹைமவத
3. ஹரிவருஷ
4. விதேஹ
5. ரம்யக
6. ஹைரண்யவத
7. ஐராவத

குலபர்வதங்கள்.

1. ஹிமவன்
2. மஹாஹிமவன்
3. நிஷத
4. நீலி
5. ருக்மி
6. சிகரி

பொய்கைகள் (ஸரோவரங்கள்)

1. பத்ம
2. மஹாபத்ம
3. திகிஞ்ச
4. கேஸரி
5. புண்டரீக
6. மஹாபுண்டரீக

நதிகள் (ஆறுகள்)

1. கங்கா
2. ஸிந்து
3. ரோஹித்
4. ரோஹிதாஸ்யா
5. ஹரித்
6. ஹரிகாந்தா
7. ஸீதா
8. ஸீதோதா
9. நாரீ
10. நரகாந்தா
11. ஸுவர்ணகூல
12. ருப்யகூல
13. ரக்தா
14. ரக்தோதா

கர்மபூமி—(உழவு முதலான தொழில்களால் ஜீவிக்குமிடம் அல்லது கர்மங்களைக்கெடுக்குமிடம்)
பரதம், ஐராவதம், விதேஹம் இம்மூன்றும் கர்மபூமியாகும்.

போகபூமி—கல்பதருக்களாலளிக்கும் ஸுகபோகங்களை யனுபவிக்கும் இடம். இது ஜகன்ய, மத்யம, உத்தம என மூவகையாகும்.

ஹைமவத, ஹைரண்யவத இவ்விரண்டும் ஜகன்ய போகபூமியாகும். ஹரிவர்ஷ, ரம்யக இவ்விரண்டும் மத்யம போக பூமியாகும். தேவகுரு, உத்தாகுரு இவ்விரண்டும் உத்தம போக பூமியாகும்.

ஊர்த்வலோகம். பதினாறுகல்பங்கள்

1 ஸௌதர்ம 2 ஈசான 3 ஸநத்குமார 4 மாஹேந்திர 5 பிரம்ம 6 பிரம்மோத்தர 7 லாந்தவ 8 காபிஷ்ட 9 சுக்ர 10 மஹாசுக்ர 11 சதார 12 ஸஹஸ்ரார 13 ஆனத 14 பிராணத 15 ஆரண 16 அச்யுத.

நவக்ரைவேயகங்கள்

1 ஹேஷ்டிம ஹேஷ்டிம 2 ஹேஷ்டிம மத்யம 3 ஹேஷ்டி மோபரிம 4 மத்யம ஹேஷ்டிம 5 மத்யம மத்யம 6 மத்யமோபரிம 7 உபரிம ஹேஷ்டிம 8 உபரிம மத்யம 9 உபரிமோபரிம.

நவாநுதிசைகள்

1 அச்சா 2 கச்சா 3 வஜ்ரா 4 வைரோசந 5 அச்சா மாலினி 6 கச்சா மாலினி 7 வஜ்ரா மாலினி 8 வைரோசநமாலினி 9 ஆதித்யவிமானம்.

பஞ்சாநுத்தரங்கள்.

1 விஜய 2 வைஜயந்த 3 ஜயந்த 4 அபராஜித 5 ஸர்வார்த்தஸித்தி.

ஜைன ஸித்தாந்த முதற் புத்தகம் முற்றிற்று.

பரீக்ஷைக் குறிய கேள்விகள்

1. பஞ்சநமஸ்காரம் என்றால் என்ன? அது எத்தனை வகையுள்ளது?
2. ஜைநர் என்றால் யார்? ஜைநரின் கொள்கை என்ன? ஜைநரின் முதல் ஆசாரமெது? பஞ்சோதும்பரமென்றால் என்ன?
3. ஜபம் என்றால் என்ன? அதுஎத்தனை வகையுள்ளது? அதை ஏன் செய்யவேண்டும்?

4. தியானம் என்றால் என்ன? பிறன் மனைவியைக் கெடுக்கவேண்டுமென்று நினைத்தல் எந்த தியான மாகும்? தர்மயத் தியானத்தின் லக்ஷணமென்ன?

5. காதியென்றாலென்ன? விக்னம் செய்வது எக்கருமம்? நவதேவதைகளின் பெயரைக்கூறு? ஜின தர்மத்தின் லக்ஷணமென்ன?

6. கடவுள் என்றால் யார்? குற்றங்களெத்தனை?

7. ஜினன் பெயர்களில் உனக்குத்தெரிந்த ஏழு பெயர் களைக் கூறு?

8. யார் கூறியது நூலாகும்? திருவாய்மொழி யென்றால் என்ன?

9 யாவர் குரு ஆவர்? மித்யாத்வம், ஸ்திரீவேதம், சோகம் என்றால் என்ன?

10. ஸம்யக்தரிசனம் என்றால் என்ன? தேவதைகளை, எவ்விதம் வணங்கினால் மூடமாகும்? கூன், குருடு செவிடு, ஊமை, முடவர்களாக பிறப்பது எக்கார ணத்தால்? மதங்க ளெத்தனை பெயரை மாத்திரம் கூறு?

11. ஸம்யக் ஞானமென்றால் என்ன? கைகளால் தொடு தல் என்ன ஞானம்? மனப்பர்யயக்ஞானம் என்றால் என்ன? பிரதமானு யோகமென்றாலென்ன?

12. ஸம்யக்சாரித்திரமென்றாலென்ன? மஹாவிரதம் எத் தனை? அணுவிரதம் எத்தனை? தானம் கொடுத்தல் எவ்விரதத்தைச் சேர்ந்ததாகும்? ஹிம்ஸா தானம் எது? துஸ்ஸ்ருதி யெது?

13. இல்லறத்தார்களின் நிலைகள் எத்தனை? க்ஷுல்லகன் ஐலகன் இருவரும் எத்தனையாவது நிலையில் சேர்ந்த வர்கள்? நீ எந்த நிலையில் சேர்ந்தவன்?

14. இல்லறத்தார்களின் காலைக்கடமையென்ன? ஆவர்த் தனையென்றாலென்ன?

15. நித்தியக்கடமை யெத்தனே? தொழில்கள் எத்தனே? உபாத்தியாயரை நமஸ்கரித்தல் எக்கடமையைச் சேர்ந்தது? தபம் என்றால் என்ன?

16. தத்வமெத்தனே? சாரைப்பாம்பு, நாய், எறும்பு, வண்டு குதிரை இவைகள் ஸ்தாவர ஜீவனா? த்ரஸ ஜீவனா? ஸம்ஞீ யென்றால் என்ன? நீ ஸம்ஞீயா? அஸம்ஞீயா?

17. புத்கலம் எது? தருமத்திரவியம் நமக்கு என்ன உதவி புரிகிறது? அத்தருமத்திரவியம் இல்லாவிடில் என்ன செய்ய முடியாது? திரவியமெத்தனே? அஸ்திகாய மென்றால் என்ன?

18. கதிகள் எத்தனே? பிராணியைக் கொன்றவன் எக் கதிக்குப் போவான்? கதியென்றாலென்ன?

19. நிகழ்கால தீர்த்தங்கரர்கள் எத்தனே? 13, 19, 23, 9, 12-ம் தீர்த்தங்கரர்களின் பெயர் என்ன?

20. காமதேவர்கள் எத்தனே? மனுக்கள் எத்தனே? ஐந்தாம் மனுவின் பெயர் என்ன? நாபி ராஜன் எத்தனேயாவது மனு? ருத்ரன் எத்தனேயாவது நாரதன்? ருத்ரர்கள் எத்தனே?

21. இறந்தகால தீர்த்தங்கரர்கள் எத்தனே? 12, 6, 21, 19, 11ம் தீர்த்தங்கரர்களின் பெயர் என்ன? எதிர் கால தீர்த்தங்கரர்கள் எத்தனே? 2, 17, 22, 16ம் தீர்த்தங்கரர்களின் பெயர் என்ன? விதேஹ க்ஷேத்திர தீர்த்தங்கரர்கள் எத்தனே?

22. உலகம் எத்தனே? நரகங்களெத்தனே? ஸனத்குமார, சதார, சுக்ர இவைகள் எத்தனேயாவது கல்பங்கள்?

பத்ரம் சுபம் மங்களம்

卐
卐卐卐
卐卐卐卐卐

ஆரணி கிருஷ்ணு அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.